(Chapter XXII code of Crl. Procedure)
In the Court of III Addl. District and Sessions Judge,
Tirupattur, Vlr. Dt.

| | | |
|---|---|---|
| **Civil Cases** | : | **MCOP.1/2018** |
| Deposition of witness of | : | **R.W.1** |
| Name | : | **ராம்குமார்** |
| Father's Name | : | ஞானசேகரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07.02.2019 சாட்சி ஆஜர் சத்திய பிரமாணம் பெறப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

3-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நகல் **எ.ம.சா.ஆ1**. புலன் விசாரணை அறிக்கை நகல் **எ.ம.சா.ஆ2**. 3-ம் எதிர்மனுதாரருக்கும், ஓட்டுநருக்கும் அனுப்பி அறிவிப்பின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ3**. எதிர்மனுதாருக்கும், ஓட்டுநருக்கும் வழக்கறிஞர்மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ4**. இருசக்கரவாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் **எ.ம.சா.ஆ5**.

**குறுக்கு விசாரணை :**

விபத்து குறித்து ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இவ்வழக்கு குறித்து ஆவணரீதியாகத்தான் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையெழுத்து போட்டேன். முதல் தகவல் அறிக்கையில் ஆம்புலன்ஸின்மீது, இருசக்கர வாகனம் போய் மோதியதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால், ஆம்புலன்ஸ் வேகமாக வந்ததாகவும், இருசக்கர வாகனம்

குறுக்கே வந்ததாகவும், முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால், ஆம். அந்த வாகனத்தின் பதிவு எண்.TN23-CC-0277 என்றால், ஆம். விபத்தின்போது இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் பெயர் ஹரீஷ்குமார் என்றால், ஆம். இருசக்கர வாகனம்தான் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்தது என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால், ஆம். மிதமான வேகத்தில் வந்திருந்தால், இருசக்கர வாகனம் குறுக்கே வந்திருந்தாலும், விபத்தை தவிர்த்திருக்கலாம் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறியிருப்பது ஒரு அனுமானத்தின்பேரில் என்றால், ஆம். இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஹரீஷ்குமார் விபத்தின்போது இளவராக இருந்தார் என்று நான் சொல்லியிருப்பது எதனடிப்படையில் என்றால், விபத்து பதிவேட்டு நகலில் ஹரீஷ்குமாருக்கு வயது 17 என்று கண்டுள்ளது. அந்த விபத்து பதிவேட்டு நகலை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்திருக்கவில்லை என்றால், இல்லை. இவ்வழக்கு விபத்துக்கு குற்ற இறுதி அறிக்கை யார் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை. இவ்வழக்கில் புலன் விசாரணை நான் மேற்கொள்ளவில்லை, எங்கள் நிறுவனம் சார்பாக செந்தில்குமார் என்பவர் புலன் விசாரணை செய்துள்ளார். செந்தில்குமார் தயாரித்த புலன் விசாரணை அறிக்கை மற்றும் போலிஸாரின் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன். புலன் விசாரணை அறிக்கை செந்தில்குமாரால் என்று எங்கள் நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், 27.03.2018-ல் தாக்கல் செய்துள்ளார். 22.06.2018-ல் ஹரீஷ்குமார்மீது குற்ற இறுதி அறிக்கை போலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களுக்கு சாதகமான ஆவணங்கள் மட்டுமே நாங்கள் தாக்கல் செய்திருக்கிறோம் என்றாலும், எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகனத்தின் ஓட்டுநர்மீதுதான் போலிஸாரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், நஷ்டஈடு கொடுப்பதை

தவிர்ப்பதற்காக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை பாரா 11-ல் ஹரீஷ்குமாரின் பிறந்த தேதி 1999 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றாலும், அதனால் விபத்து சமயத்தில் ஹரீஷ்குமார் இளவர் அல்ல என்றாலும், சரியல்ல. விபத்தில் இறந்தவர் மற்றும் காயமுற்ற மூவரும் 3-ம் நபர்கள் என்றால், ஆம். இருசக்கர வாகனத்திற்கான காப்பீட்டில் 3-ம் நபருக்கான பிரீமியம் செலுத்தப்பட்டுள்ளது என்றால், ஆம். நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனது பிரமாண வாக்குமூலத்தில் இருசக்கர வாகன ஓட்டுநர்மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றாலும், சரியல்ல. எ.ம.சா.ஆ5-ல் ஓட்டுநர் உரிமம் காட்டப்படவில்லை என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஆம், இருந்திருந்தால் காட்டியிருப்பார், அதனால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. 06.02.2019-ல்தான் இருசக்கர வாகனத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பி, ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா இல்லையா என்று கேட்டிருக்கிறோம் என்றாலும், இன்று 07.02.2019-தான் என்றாலும், அதனால் அதற்குள் எப்படி பதில் வரும் என்றாலும், ஏற்கனவே எங்கள் நிறுவனத்தில் ஒரு அறிவிப்பு அனுப்பியிருக்கிறோம். அந்த அறிவிப்பிற்கும் அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால், சரி. விபத்திற்கு காரணம் எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஓட்டுநர் என்றாலும், அதனால் நாங்கள்தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை :**

இருசக்கர வாகன ஓட்டுநர் ஹரீஷ்குமாரின் வயது 17 என்றுதான் காயச்சான்றில் காட்டப்பட்டுள்ளது. மேற்படி காயச் சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ6.**

**மறு குறுக்கு விசாரணை :**

விபத்தில் இருசக்கர வாகன ஓட்டுநரான ஹரீஷ்குமாரும் காயமுற்றார் என்றாலும்,

மருத்துவமனையில் சேர்க்கப்படும்போது அவர் சுயநினைவு இல்லாமல், மயக்கத்தில் இருந்தார் என்றாலும், யாரோ அவருக்கு வயது 17 என்று கூறியிருக்கிறார் என்றாலும், சரியல்ல, அவரை அழைத்துவந்து மருத்துவமனையில் சேர்த்தவர் அவரது சகோதாரர் என்று விபத்து பதிவேட்டிலேயே சொல்லப்பட்டுள்ளது. ஹரீஷ்குமார் மேஜர் என்பதால்தான் குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால், சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**